**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.44 /2024**

**Deposition of P.W.** 1

Name : சபின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**01.04.2026**

**A1, A2 Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் பூச்சிக்காட்டுவிளையில் வசித்து வருகிறேன். இருசக்கர வாகனம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். வீட்டின் அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தில் உள்ள வாழை மரத்தை சுஜின் என்பவர் வெட்டி விட்டார். எனவே, எதிரிகளுக்கும், சுஜினுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. இது குறித்து நான் கேட்டதால் முன்விரோதம் ஏற்பட்டு 6 மாதங்கள் கழித்து 10.04.2020ம் தேதி இரவு 07.30 மணிக்கு ஐசக் என்பவரது வீட்டின் அருகே வந்த போது நானும், எனது ஊழியர் ஜெஸ்பினும் வந்த போது 3 மோட்டார் சைக்கிள்களில் 6 பேர் வந்து சிபு என்னை வெட்டுக்கத்தியால் வலது கன்னத்தில் வெட்டினார். கண்ணன் (எ) அருள்ராஜ் வெட்டுக்கத்தியால் இடது பக்க கழுத்தில் வெட்டினார். சஜின் முதுகில் வெட்டினார். அஜின்

தலையில் வெட்டினார். என்னுடன் வந்த எஸ்பினை வினிஷ் என்பவர் வலது கையில் வெட்டினார். சம்பவத்தை ஷாஜின், மகேஷ், சசி, ஆகியவர்கள் பார்த்தார்கள். ஷாலோம் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் சிகிச்சையில் இருந்த போது கொடுத்தது தான் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

3 இருசக்கர வாகனத்தில் 6 பேர் வந்து வெட்டினார்கள் என்று போலீசார் விசாரிக்கும் போதும் சொன்னேன். 6 பேரும் வெட்டுக்கத்தி வைத்திருந்தார்கள். புறம்போக்கு நிலத்தில் இருந்த வாழை மரத்தை வெட்டியதால் விரோதம் என்று போலீசாரிடமும் சொன்னேன். ஆஜர் எதிரிகளை தவிர மீதமுள்ள எதிரிகள் என்னை எங்கு, எங்கு வெட்டினார்கள் என்றால் தலை, கழுத்து, வலது கை, முதுகு ஆகிய இடங்களில் வெட்டினார்கள். என்னை மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் கொண்டு போனார்கள். என்னுடன் எனது அண்ணன், அம்மா ஆகியவர்கள் மருத்துவமனைக்கு வந்தார்கள். முதலில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் இரவு 02.00 மணி வரை இருந்து விட்டு ஷாலோம் மருத்துவமனைக்கு வந்து விட்டேன். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் எனக்கு 120–க்கும் மேல் தையல் போட்டார்கள். எனக்கு 6 இடங்களில் ஏற்பட்ட காயங்களுக்கு தையல் போட்டார்கள். முதன் முதலாக சம்பவ இடத்தில் ஆம்புலன்சில் வைத்து வாக்குமூலம் கொடுத்தேன். அப்போது அங்கு 5, 6 போலீசார் இருந்தார்கள்.

ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து எனக்கு பேச முடியாததால் எனது அம்மாவும், எனது அண்ணனும் வாக்குமூலம் கொடுத்தார்கள். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து எனக்கு நுண்கதிர் படம் எதுவும் எடுக்கவில்லை. மருத்துவரிடம் சொல்லி விட்டு தான் ஷாலோம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போனேன். ஷாலோம் மருத்துவமனையில் மருத்துவரிடம் என்னை 6 பேர் வெட்டியதாக சொன்னேன். 6 பேர்களில் யாராவது என்னை வெட்டுக்கத்தியின் மறு பக்கம் கொண்டோ அல்லது பிடி கொண்டோ தாக்கினார்கள் என்றால் வெட்டினார்கள். வெட்டுப்பட்டதில் சட்டையிலும் ரத்தம் பட்டது. எனக்கு வெட்டுக்காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனக்கு எங்கோ எப்படியோ ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மீது 3 வழக்குகள் வரை உள்ளது. அவை அடி தடி வழக்குள் ஆகும். என் மீது வழக்குகள் இருப்பதால் நிறைய எதிரிகள் உள்ளனர் என்றால் சரியல்ல. எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் வழக்குகள் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.44 /2024**

**Deposition of P.W.** 2

Name : எஸ்பின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**01.04.2026**

**A1, A2 Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் ஆற்றூரில் வசித்து வருகிறேன். இருசக்கர வாகனம் கன்செல்டிங் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். அவரிடம் நான் இருசக்கர வாகனங்கள் வாங்கி விற்கும் கடையில் வேலை பார்த்தேன். எதிரிகள் இருவரையும் எனக்குத் தெரியாது. என்னை யார் வெட்டினார்கள் என்று எனக்குத் தெரியாது. அ.சா.1ஐ நான் மருத்துவமனைக்கு அழைத்து போனேன். அ.சா.1–ற்கு வெட்டுப்பட்டிருந்தது. அதனால் மருத்துவமனைக்கு அழைத்து போனேன். யார் வெட்டினார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

14.10.2020ம் தேதிஇரவு 07.30 மணிக்கு காட்டுவிளை ஐசக் என்பவரின் வீட்டு முன்பு வைத்து எதிரிகள் அ.சா.1ஐ வெட்டி கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், அதில் காயம்பட்ட அ.சா.1ஐ தடுக்க சென்ற போது என்னையும் வெட்டியதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.